28th March 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) No representation has been received by the Government as stated.

SRI A. VEDARATHNAM : ராமநாதபுரம் ஜில்லாவினுடைய தலை நகரம் அந்த ஜில்லாவிலேயே இல்லாததன் காரணமாக அது மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருப்பதாகவும், சமீபத்தில் நடந்ததுபோன்ற சம்பவங்களுக்கு முக்கிய காரணமாக இருக்கிறது என்றும் கருதப்படுமானால் அந்த ஜில்லாவின் தலைநகரத்தை அந்த ஜில்லாவிலேயே அமைப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

MR. SPEAKER : தனிக் கேள்வி போடவேண்டும். மனு வந்திருக்கிறதா என்றார்கள். மந்திரி இல்லை என்று சொல்லிவிட்டார். அவ்வளவு தான்.

Poramboke lands

* 442 *Q.*—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Revenue be pleased to state the principles governing the assignment of Government poramboke lands?

THE HON. SRI M. A. MANICKAVELU : A short note[a] explaining assignment policy of the Government is placed on the table of the House.

SRI A. R. MARIMUTHU . கனம் சபாநாயகர் அவர்களே, புறம் போக்கு நிலங்களை ஜாரி செய்வதில் வால்யுபல் லாண்டு, நான்வால்யுபல் லாண்டு என்பதாகப் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு நிலம் கொடுப்பதைப் பொறுத்த மட்டிலுயாவது வால்யுபல் லாண்டாக இருந்தாலும் சாகுபடிக்குத் தகுதியான நிலங்களை கிரயம் வாங்காமல் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த மாதிரியாக வால்யுபல் லாண்டு, நான்வால்யுபல் லாண்டு என்பதாகப் பாகுபாடு இருக்கிறதே தவிர விவசாயிகளுக்கு வால்யுபல் லாண்டு பணம் இல்லாமலும் கொடுக்கப் படுகிறது.

SRI K. B. S. MANI : இந்தப் புறம்போக்கு நிலங்கள் சம்பந்தமான கேள்விக்கு மந்திரி அவர்கள் கொடுத்திருக்கிற பதிலிலிருந்து அரசாங்கத்தார் அதிகமான நிலங்கள் வழங்கியிருப்பதாகத் தெரிகிறது. இன்னும் செழுமையுள்ள நிலங்கள் அநேகம் கோயமுத்தூர் ஜில்லாவில் இருந்தும் பழைய பெயரின்படி குளப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு என்று ஏதேதோ சொல்லி அவைகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. தவிர அவைகளினால் எவ்வித பிரயோஜனமும் இல்லை. ஆகவே அந்த மாதிரி புறம்போக்கு நிலங்களை ஏழைகளுக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா, அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: அதற்கு ஏற்கெனவே சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்த மாதிரி பொது உபயோகத்திற்குத் தேவைப்படாத நிலங்கள் கொடுக்கப்பட்டுத்தான் வருகிறது.

MR. SPEAKER : Questions Nos. 443, 444, 445 and 446 may be answered together as all of them relate to poramboke lands.

Assignment of poramboke lands

* 443 *Q.*—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any representation recently from the tank-bund fishermen of Adirampattinam in Pattukkottai taluk regarding the assignment of Government poramboke lands to them; and

(*b*) if so, the action taken thereon?

---

a Printed as Appendix II on pages 205—208 *infra.*